REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.	வியாழந்தோறும் வெளியாகும்	விளம்பர விகிதம்.
[தபால் சிலவுள்பட]	ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.	ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
ஜீவிய சந்தா ... ரூ. 50		அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒரு வருஷ சந்தா ... ரூ. 3	स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।	ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
ஆறுமாத சந்தா ... ரூ. 1½	गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥	இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை அணா 8
தனிப்பிரதி ஓரணா		நீண்டகால விளம்பரங்களுக்கு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்		தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்ரம-௵ மார்கழி-௴ 5௳ 1940-௵ டிஸம்பர்-௴ 19௳ | ஸ-49

வாரக்குறிப்புகள்

ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா

நல்லதைக் கொண்டாடுவோம்!! ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி அவர்கள் ஸத்யாக்ரஹம் செய்யு முன்பு ஸ்ரீ ஜகத்குருவை தரிசித்து அநுக்ரஹம் பெற்றதும், சிறைக்கு பகவத்கீதை ஸ்ரீமத்ராமாயணம் முதலியவைகளை எடுத்துச்சென்றதும் ஸாதாரணமான தேசீய வாதி செய்யமாட்டார்தான். ஆதி முதல் ஆஸ்திகதை நிறைந்தவர். என்றைக்கும் நெற்றிக்கு இடுபவர். ஸந்த்யை அநுஷ்டிப்பவர் இவரைப்போல் வெகு சிலரே காங்கிரஸ் வாதி.

ஆனால் ஏமாறமாட்டோம்!! ஸ்ரீமான் அய்யர்தான் தேச நிமித்தம் சிறை செல்வதை ஸ்ரீ ஜகத்குரு தர்மமென ஆமோதித்ததைக் கொண்டு ஸநாதநிகளைக் காங்கிரசை ஆதரிக்கும்படி ஸமயோசித சொற்களால் அழைக்கிறார். இன்று சில நிமிஷங்கள் அவர் ஸ்ரீ ஜகதாசார்யாளைத் தர்சித்தவர். ஸநாதநிகள் இன்றும் என்றும் ஸ்ரீ குருபாதுகைகளை மறவாது உபாஸித்து கருணை கடாக்ஷத்திற்கு' பாத்ரமானவர்கள். அதர்மத்தை விட்டால் உடனே அதில் சேரலாம்.

யோகத்திலும் தலை கீழ்தானா? ஜவஹர்லால் நேரு சிறையில் யோகஞ் செய்கிறாராம். தலையை கீழேவைத்து காலை மேலே நிறுத்தும் ஆஸநம்தான் அவருக்கு ரொம்ப பிடித்தமாயிருக்கிறதாம். தர்மத்தை தலைகீழாக மாற்றி பேசி செய்பவர் வேறெதை ஆமோதிப்பார்?

தீது! தீது!! தீதே!!! ஜின்னாகூறும் பாகிஸ்தான் மிகத் தவறானதென பலர் கூறினர்! பல்வேறு ஜாதியாரும் பங்கிட்டுக் கூறுகூறுகப் பிறிக்க அவர் வழிகாட்டியாவார் என்பதைச் சிறிதளவும் சிந்திக்கவில்லை! கடைசியாக பிறித்தாலும் தந்த்ரம் நிறைந்த அமெரிவாயிலும் இது தீதென வந்து விட்டது! ஜின்னாவை மஹம்மதியர் மாத்திரம் நிறைந்த ஓர் ஜில்லாவிற்கோ ஓர்மாகாணத்திற்கோ அதிகாரியாக்கி அவர் என்ன செய்து விடுகிறார் எனப்பார்த்தல் அவசியம்!!

தலைவர்களுக்கு நன்றி/! மிக சிறப்பாக மாகாண வர்ணாச்ரம ஸபையை நடத்திய கார்யதர்சி, தலைவர் அனைவர்க்கும் பல பல நன்றி! இவ்வுத்ஸாஹத்தைச் சோரவிடாமல் இங்கனம் உத்ஸவாதி காலங்களில் ஜில்லா ஸபை அல்லது பிரசாரமேனும் செய்து ஒழுங்காக கார்ய கமிட்டியை அமைத்தல் நலம்!!

பேச்சில் மார்த்தவம்தேவை!! தலைவர்கள் விழுப்புரத்தில் நடத்திய பிரசாரத்தில் அரசாங்கத்தையும் சில தேசீய வாதிகளையும் ஆத்ரத்துடன் கடுமையாகப் பேசியதால் சில ஆக்ஷேபங்கள் தோன்றினவாம்!! தலைவர்களது மதாபிமானத்தை உணர்ந்தால் ஆக்ஷேபிக்க இடமில்லை! எனினும் மிருதுவாக பேசலவச்யம்.

நான்கு வேத சாஸ்த்ர பாடசாலை!! திக்விஜயம் செய்த அரசர் ஜயஸ்தம்பம் நாட்டுவது போல் நமது ஜகத்குரு ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகள் யாத்ராஞாபகமாக 4 பாடசாலைகள் விரைவில் ஏற்படுமென அறிந்து மகிழ்கிறோம்! விவரம் பின்னர் விரிவாக வரும்!!

ஸ்ரீ பரித்தியூர் சாஸ்திரிகள் சரிதம்!! ராமாயண ப்ரவசந மார்க்க கர்த்தாக்களாகிய ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளது சரித்திரத்தை வெளியிட அவா. அவர் பக்தர்கள் சீடர்கள் பந்துக்கள் தாங்கள் தாங்களறிந்த தகவல்களை ஆர்யதர்மம் மூலம் அல்லது 154. தம்பு செட்டி வீதி சென்னை, என்றஅடியேன் விலாஸத்திற்கேனும் எழுத ப்ரார்த்திக்கிறேன்.

அண்ணாமலை கலாசாலையில் அமளி

மாணவர்கள் கைது செய்யப் பட்டனர்.

பரீக்ஷை ஒத்திவைக்கப்பட்டது.

சிதம்பரம் அண்ணாமலை கலாசாலையில் சில மாணவர்கள் பொதுவுடமை வாதிகளாவும், யுத்தத்திற்கு விரோதமாகவும்இருப்பது அறிந்து அவர்களைப் போலீஸார் கைது செய்து வேலூர் ஜயிலுக்குக் கொண்டுபோனார்கள். இது ஸம்மந்தமாக மற்ற மாணவர்கள் பெரிய கூட்டம் போட்டு எதிர் ஆர்பாட்டம் செய்ததால் போலீஸார் த்டியடி பிரயோகம் செய்தனர். பல மாணவர்களுக்கு காயம் ஏற்பட்டது. அனேகம் மாணவர்கள் ஊரைவிட்டுப் போய்விட்டார்கள். இதனால் பரிக்ஷை ஒத்திவைக்கப்பட்டது

லார்டு மோதியன் மரணம்

அமெரிக்காவில் பிரிடிஷ் தூதராகஇருந்து வந்த லார்டு லோதியன் திடீரென மரணமடைந்தார். இவர் நல்ல மதப்பற்றுள்ளவர். இந்தியாவில் மதப்பற்று அதிகரிக்க வேண்டுமென்றும், ஐரோப்பாவைப்போல் நாஸ்திகம் இங்கு பரவவிடக்கூடாதென்றும், சில வருஷங்களுக்கு முன் அவர் பேசினார். லோதியன் கமிட்டித் தலைவராக இந்தியாவிற்கு வந்து சிறந்த வேலை செய்தார் பிறகு மற்றொருதரம் இந்தியாவிற்கு வந்து ராஜியத் தலைவர்களுடனும் காந்தியுடனும் ஸம்பாஷித்தார்.

ஜர்மன் உளவாளிகள் தூக்கிலிடப்பட்டனர்

பிரிடனில் இரண்டு ஜர்மன் உளவாளிகள் வந்து மாறுவேஷத்துடன் உளவறிந்து விஷயங்களை ஜர்மனிக்குத் தெரிவித்து வந்த குற்றத்திற்காக பிரிடிஷ் கவர்ன்மென்டாரால் தூக்கிலிடப்பட்டனரென்று ராய்ட்டர் செய்தி கூறுகிறது.

நில வரி வஜா.

வழக்கம்போல் 75 லக்ஷம்

சென்னை கவர்ன்மெண்டார் சில வருஷங்களாகச் செய்து வருவதுபோல் புதிய வருஷத்திலும் 75 லக்ஷம் நிலவரி வஜா செய்ய உத்திர விட்டிருக்கிறார்கள். கடைசி கிஸ்தியில் இந்த வஜா பிரகாரம் பணம் குறைத்து வசூலிக்கப்படும்.

ஸ்ரீஸத்யமூர்த்தி சிறை சென்றார்.

9 மாதம் வெறுங்காவல் தண்டனை.

ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி மாம்பலத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் யுத்த எதிர்ப்பு பிரசாரம் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டு 9 மாதம் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். மேலும் பல விடங்களிலும் ஸத்யாக்ரஹம் நடந்து வருகிறது.

நாடு முன்னேறும் வழி

[கே. வி. கே. சர்மா. புனு]

வெகு நூற்றாண்டுகளாக கல்வித்துறையிலும் நாகரீகத்திலும் சிறப்புற்று இவ்வுலகத்திற்கே ஒரு திலகம் போன்று மகோன்னத நிலையில் இருந்து அழியாபுகழடைந்த நமது பாரததேசம் தற்காலம் விவரிக்க சாத்தியமற்ற சீர்கேட்டை அடைந்திருக்கும் விஷயம் யாவருமறிந்ததே. இவ்வித துர்நிலைக்கு பலமேதாவிகள் பலவிதகாரணங்கள் கூறக்கூடும். அவைகளை இங்கும் விவரிப்பதோ அவைகள் உண்மைதானா அல்லவா என்பதை நிரூபிப்பதோ சாத்தியமுமல்ல எமது உச்தேசமுமல்ல. ஆயினும் தத்காலத்திய மனிதர்களின் சில ஆலோசனைகளற்ற செய்கைகள் அதன் காரணங்களில் சேரக்கூடுமென்றால் மிகையாகாது. உண்டு களித்துறங்கியும் உபயோகமற்ற செய்கைகளால் காலத்தைப் போக்குவதும் மனிதன் கடமையெனத்தோன்றியதும் முதல் இந்திய நாகரீகத்திற்கே ஓர்கெட்ட காலம் தலைவிரித்தாட துவக்கிவிட்டதென எமது துணிபு. இந்தியர்களின் முக்யமான வாழ்விற்கு இன்றியமையாத வஸ்துக்கள் யாவையென மனதால் சிந்திக்கவே இடமின்றி ஆபாஸமான நாகரீகங்களில் மோகத்திற்கு இடங்கொடுத்ததே பிசகுகளில் முதன்மையானதெனக்கூறுவது முற்றிலும் பொருந்தும். களங்கமற்ற வித்யாப்பியாசமும் மனோநிக்ரஹமுமின்றி அர்த்தமற்ற ஆடம்பரவாழ்கைகளில் மனதைப்பறிக்கொடுத்தும் தேவைகளைமீறி திரவியார்ஜனையில் புகுந்ததும் நமது தோஷமேயாகும். இவைகளை ஆழ்ந்து ஆராயாமல் அன்னிய நாட்டாரின் ஆளுகையைப் பல மார்க்கங்களில் தூற்றிக் கொண்டு வருவதால் யாதொரு பயனுமில்லை.

ஒரு நூற்றாண்டிற்குள் இந்தியாவில் மனிதர்களின் மனப்பான்மைகளும் நடத்தைகளும் எவ்வளவு தூரம் மாறுபாட்டையடைந்திருக்கின்றனவென்பதை ஒவ்வொரு மனிதனும் ஏகாந்தத்தில் ஆராய்ந்து யோசித்தால் உண்மைதுலங்கிவிடும். நிர்மலமானகாற்றும் சுத்தமான தண்ணீர் வசதியும் குன்றாத புனிதமான கிராமங்களில் நமது முன்னோர்கள் அவரவர்கள் தர்மங்களைத்தவறாது நடத்திக்கொண்டு எளியவாழ்கையாலேயே பரிபூர்ணமான மனஸ்திருப்தியையும் அடைந்த காலத்தில் அவர்களுக்கு கனவிலும் தோன்றாத பலவித புதிதுபுதிதான கஷ்டங்களும் இடையூறுகளும் நமக்கு மாத்திரம் ஏன் தோன்றவேண்டுமென தீரவிசாரித்தால் நமது மோகமே நமக்கு சத்ருவாயிற்றுவென்பது விளங்கும். ஆங்கிலம் படித்தால் தான் உத்யோகம் கிடைக்கும் என்றே நமக்குப் பெருமை என்றே எண்ணக்கூடிய மகத்தான பிரமம் இனியும் குறையத் தொடங்கவில்லை. ஆனால் படித்தவர்கள் எல்லோரும் உத்யோகஸ்தர்களாகும் காலம் மாத்திரம் மலையேறிவிட்டது. தவறி ஓர் சிறிய தொகையினருக்கு கிடைத்தாலும் அந்தணர்கள் விஷயத்தில் எவ்வித கட்டுபாடுகள் தோன்றி விட்டன என நினைத்தால் யாவரும் ரத்தக்கண்ணீர் வடிக்காதிருக்க முடியாது.

தற்காலத்திய மாணவர்களுக்கு கிடைத்த ஜன்மம் கடைத்தேறவோ இம்மை சுகத்தையாவது அடையவோ, யாதொரு உபாயமுமின்றி கல்வியின் உருவம் அமைந்திருப்பதோடு, ௸ மாணவர்களுக்கு பெரும்பாலும் வேத சாஸ்திரங்களில் நம்பிக்கையோ, அவைகளைக் கற்றுணர்ந்த வித்வான்களிடத்தில் ஆதரவோ, பக்தியோ, விசுவாசமோ, சிறிதேனும் காணப்படுகிறதில்லை. விதண்டாவாதம் புரியவும், வீண்குதர்க்கங்களால் வாதாடவும் தற்காலத்திய கல்வி உபயோகப்பட்டு வருகிறது. வேத சாஸ்திரங்களைக் கற்கவோ அவைகளைப் பிரசாரம் செய்யவோ மனிதர்களுக்கு நன்னெறியைப் போதிக்கத்தகுந்த வழிகளை விருத்தி செய்யவோ தனிகர்கள் முன்வராமல் தங்கள் சந்ததிகளையும் நவீன போகத்திற்குள்ளாகும்படியாக நடந்து கொள்வதாலும், முன்காலம் போல் வர்ணாசிரம தர்மங்களை சரிவர அனுஷ்டிக்கும்படி ஜனங்களை வற்புறுத்தும் ராஜாக்கள் குறைந்துவிட்டபடியாலும், புலியைப்பார்த்துப் பூனையும்சூடுபோட்டுக்கொள்வதுபோன்று, மனிதர்களும் யுக்தாயுக்த விசாரமின்றியே ஒருவர் போகும் வழியிலேயே வரைந்து ஏழைகளுக்குக் கூட உஜ்ஜீவிக்க இடமின்றியே போய்வருகிறது.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ஆயிரக்கணக்கான தேர்ச்சிபெற்றமாணவர்கள் கல்லூரிகளினின்றும் வெளிவருகின்றனர். இவ்வளவு பேரும் உத்யோகத்திற்காகவேதான் படிக்கிறார்கள் என்பது மறைக்க முடியாத உண்மை. ஆயினும் எல்லோருக்குமே உத்யோகம் கொடுத்துதான் ஆகவேண்டுமென எங்கும் விதி இல்லாததால் அதற்காக சர்க்காரை குறைகூறுவது அனுசிதமேயாகும். தற்காலத்தியமாணவர்கள் பட்டணங்களில் புகுந்து படிக்க ஆரம்பித்தவுடனேயே வீண் ஆடம்பர வாழ்க்கைகளில் பயிற்சியடைந்து பழகிப்போவதும் உபயோகமற்றதும் தேக ஆரோக்யத்திற்கு கெடுதல்களை அளிக்கும் வழிகளில் செல்வதும் ஓர்புறமிருக்க, அவர்களின் திரிசங்கு சொர்க்கம் போன்ற நிலைமைக்குப்பெற்றோர்கள் தான் ஜவாப்தாரிகளாக ஆகிறார்கள். அளவற்ற ஐசுவரியம் படைத்தவர்கள் படித்து உத்யோகமில்லாமல் வீட்டோடு இருப்பினும் கெடுதல் அதிகம் இல்லையானாலும், ஏழைகள் அவ்விதம் படித்து உபயோகமற்றுப் போவது தான் எவரும் விசனிக்கக்கூடியதாகும். வைதிக மார்க்கத்தால் எளிய வாழ்க்கையை நடத்த அல்லல்படும் ஏழைகள்கூட தமது சந்ததிகளை ஆங்கிலப்படிப்பை உத்தேசித்து கல்லூரிகளுக்கு அனுப்பி அதற்காக தமது பூர்வீக ஸ்திதிகளையும் இழந்து எவ்விதம் தவிக்கிறார்கள் என்பதை தற்காலத்தில்வெகு அனுபவஸ்தர்கள் விவரிக்க முடியும். இது மத உணர்ச்சியே இல்லாமல் வைதிக மார்க்கத்திலும் சரி, மற்ற வழிகளிலும்சரி, சொல்லமுடியாயாமல் திண்டாட்டத்தை அடைந்து மாதா பிதாக்களைக்கூட இகழ்ச்சி செய்து வரும் பிள்ளைகள் நமது தேசத்தில் எவ்வளவு தூரம் மலிந்து விட்டார்களென்பதற்கு எத்தனையோ கதைகளும் உண்டு, அனுபவமும் உண்டு.

சிறந்தராஜாக்களால்ஆளப்பட்டும் கணக்கற்ற வித்வான்களும் கவிச்ரேஷ்டர்களும் மஹரிஷிகளும் நிறைந்து ஒரு காலம் விளங்கிய நமது நாட்டை இனியாகிலும் காப்பது நமதுகடமையென இந்தியரத்தத்தில் ஊறிய ஒவ்வொருவரும் உணரவேண்டும். பழய கால வித்யாப்யாசமும் மத போதனைகளும் நன்னடத்தைகளை கற்பிப்பதும் நிறைந்த பாடசாலைகளை பாழ்பட்டுப் போன கிராமங்களைச் சீர்திருத்தம் செய்யவும் பணம் மிகுந்தவர்கள் தமது கடமையெனக்கண்டு முன்வரவேண்டும். இதர வர்ணத்தார் தம்மை மதிக்கும்படி பிராமணர்கள் பழய ஆசாரங்களை புறக்கணிக்காமல் நடந்து கொள்ளல் வேண்டும். உத்யோகம் சுலபமாயிருந்த காலத்தில் உத்யோகம் செய்து உபகாரச்சம்பளம் பெற்று ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் தனிகர்கள் குழாய்த்தண்ணீரும் சாக்கடை வாசனையுமே நிறைந்துள்ள பட்டண வாழ்க்கையை இனியும் தொடராமல் தங்கள் தங்கள் கிராமங்களில் மறுபடியும் திரும்பிப்போய் வசித்து தங்களது புத்தியால் அங்குள்ளோரை நல்வழிப்படுத்த முயலவேண்டும்.

உண்மையான இந்திய நாகரீகம் செழித்து விளங்க வேண்டுமாயின் இதரவர்ணத்தில் போல நமது நாட்டிலும் மத உணர்ச்சியும் தெய்வ பக்தியும் புத்துயிர் பெற வேண்டும். விவாகாதி விஷயங்களில் போல பிராமணர்களின் உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களில் இன்னும் சட்டங்கள் ஏற்படவில்லையாதலால் சரியான வயதில் உபநயனம் செய்து கொண்டு நமது தர்மங்களுக்கே புகலிடமான வேதத்தை ஒவ்வொருவரும் அத்யயனம் செய்யவேண்டும். ஆங்கிலம் படித்துப் பட்டம்பெற்று சோம்பேறிகளாகத் திரியும் மாணவர்களைக் காட்டிலும் வேத சாஸ்திரங்களைக் கற்று பிழைப்பில்லாமல் போனவர்கள் எவ்வளவோ குறைந்த தொகையினர் என நிர்ணயிப்பது தவறாகாது. ஸ்வதர்மங்களை அனுஷ்டித்து கெடுவதைக் காட்டிலும் நமது சம்பந்தமேயற்ற அன்னிய தர்மங்களைச் செய்து கெடுவது முற்றிலும் அந்நியாயம். பகவான்கூட

“ஸ்வதர்மே நிதனம் சிரேய: பரதர்மோ பயாவஹ:” என்று கீதையில் அருளியிருக்கிறார்.

எல்லோரும் அவரவர் தர்மங்களை சரிவர அனுஷ்டிப்பதையே கடமையாக் கொண்டால் மனிதர்களின் ஜீவனத்தை நடத்தி வைப்பது கடவுளின் பொறுப்பு. இத்துடன் நிறுத்தப்படுகிறது.

புத்தக வரவு

ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி அனுபந்தம்.

சென்னை பிரம்மஸாயுஜ்ய புஸ்தகாலயத்து 4வது பிரசுரமான மேற்படி அகராதி ஒன்றை ஸ்ரீமான் நே. இ. வெங்கடேச சர்மா வெளியிட்டிருக்கிறார். இந்த அகராதி கோசத்தில் மிக்க உபயோகமுள்ள விஷயங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. நீதி பிரமாண லக்ஷண சுலோகங்கள் 700, பூர்விகர் சரித்திரம், 250 லௌகிக நியாயங்கள் 200 பாணினி தாதுபாடம் இவை யாவும் தமிழ் அர்த்தத்துடன் அகராதி கிரமத்தில் ;இந்த புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டிருப்பது மிகவும் உபயோகமானவை.

இதன் விலை ரூ 1—0—0 நே. இ. துரைஸாமி அய்யங்கார் ரங்கநாதம் தெரு, மாம்பலம் என்ற விலாஸத்தில் கிடைக்கும்.

சின்னமனூர்

(மதுரை)

ஸ்ரீராமாயண பிரவசனம் ஸ்ரீ சிருங்கேரி, ஸ்ரீகாஞ்சீ காமகோடி மஹா ஸ்வாமிகளின் அநுக்ரஹத்தை முன்னிட்டு கார்த்திகை௴ 24௳ முதல் ௸யூரில் கங்கைகொண்டான் பிரம்மஸ்ரீ பாகவதர் மணிசாஸ்திரிகளைக் கொண்டு ஸ்ரீராமாயண பிரவசனம் ஆரம்பிக்கப்பட்டது.

௸சுப தினத்தில் ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் பரிபூர்ண அநுக்ரஹத்துடன், பிரஸாதம், மந்திராக்ஷதை சால்வை முதலியவைகள் அனுப்பினார்கள்.

கிருஷ்ணய்யர்
வ. ஸ்வ. ஸ. காரியதரிசி.

திருவண்ணாமலை வர்ணாச்ரம மஹாநாடு.

3-வது நாள் நடவடிக்கை.

சக்தி விலாஸ மண்டபத்திலேயே மூன்றுவது நாளும் மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க மகாநாடு நடைபெற்றது. இன்றைய தினமும் பிரதிநிதிகளும், விஸிட்டர்களும் ஏராளமாக விஜயம் செய்து இருந்தனர். ஸ்திரீகள் அதிகமாக விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. காலையில் 9 மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டி கூட்டமாரம்பமாகியது. ஹிந்து மஹாஸபையோடு ஒத்துழைப்பதா, வேண்டாமா, என்ற சர்ச்சை பலமாக நடைபெற்றது. குடந்தையிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகள் இதில் அதிகப்பங்கெடுத்துக்கொண்டனர். அரசியல் தந்திர முறையில் ஸனாதனிகள் ஹிந்து மஹா ஸபையோடு ஒத்துழைப்பது தோஷமாகாது என்றும், அந்த ஸபையை நாம் தாக்காமலும் எதிரியாகச்செய்து கொள்ளாமலுமாவது இருக்கலாமென்றும் குடந்தை ஸ்ரீமான் S. மஹாலிங்கய்யர் விளக்கினார். மதுரை அட்வகேட் N.R. கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்கள் ஆத்தங்குடி கதிரேசம் செட்டியார், தேவகோட்டை ஸ்வர்ணநாதம் செட்டியார் இவர்கள் ஹிந்துமஹா ஸபையோடு சேருவதை எதிர்த்தார்கள். திருநெல்வேலி R. கிருஷ்ணஸாமி அய்யர் ஹிந்துமகாஸபையோடு ஒத்துழைக்கும் விஷயத்தை, ஒத்திவைக்க யோசனை கூறினார். பலமான விவாதம் வெகு நேரம் நடந்தது. கடைசியாக ஸ்ரீமான் நடேசய்யர் அவர்கள் ஹிந்து மஹா ஸபை விஷயமாக வெளியிட்டுள்ள அறிக்கையை அங்கீகரிப்பதென்ற தீர்மானம் நிறைவேறியது. நாழி ஆகிவிட்டதால் இத்துடன் பிற்பகல் போஜனத்திற்கு ஸபை கலைந்து விட்டது.

பிற்பகல் 2 மணிக்கு மறுபடியும் ஸபை வேதாகம பாடசாலை கட்டிடத்தில் நடைபெற்றது. 1000 ஜனங்களுக்கு மேல் ஷை கட்டிடத்தில் உட்கார்ந்து இருந்தார்கள். ஒலிபரப்பும் கருவி மூலம் பல்லாயிரக்கணக்கில் ஜனங்கள் உபந்நியாஸங்களை வெளியில் கேட்டார்கள். சாரதா சட்டத்தைக்கண்டிக்கும் தீர்மானம்முதலில் நிறைவேற்றப்பட்டது. ஆர்யதர்மம், தர்மராஜ்யா, இவைகளை தினசரிப்பத்திரிகைகளாக்குவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டு மென்றும் அதற்காக மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் திவான் பகதூர் V. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள், திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் அவர்களும் மாகாண ஸங்க காரிய தரிசி துபாஷ் T. S. ராமஸ்வாமி அய்யர், மதுரை ராவ்சாகேப் N. நடேசய்யரவர்கள் இவர்கள் அடங்கிய ஸப் கமிட்டி நியமிக்க வேண்டுமென்றும் தீர்மானத்தை அட்வகேட் N. R. கிருஷ்ணஸாமி அய்யங்கார் பிரேரேபித்தார். அக்னிஹோத்திரம் ராமானுஜதாத்தாசாரியார் தீர்மானத்தை ஆதரித்துப்பேசுகையில், அரசியல் கக்ஷிகளுக்கு பத்திரிகைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதை மேநாட்டு அரசியலைக் கொண்டு விளக்கினார்.

ஸ்திரீகள் ஸொத்துரிமை சட்டத்தைக் கண்டிக்கும் தீர்மானத்தை T. S. ராமஸ்வாமி பிரேரித்தார். பண்டிதராஜ மஹாமகோபாத்யாய R. V. கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமிகள் ஸொத்துரிமை சட்டத்தால் ஏற்படும் அல்லல்களை நன்றுவிளக்கினார். ஸ்ரீமதி பத்மாவதி அம்மாள் ஆதரித்துபேசினாள். விவாஹரத்தை கண்டிக்கும் தீர்மானத்தை அட்வகேட் R. கிருஷ்ணஸாமி அய்யர் பிரேரித்து விவாக ஸம்பந்தம் கர்மாதீனம் என்பதைவிளக்கினார். மதுரை அட்வகேட் N.R. கிருஷ்ணஸாமி அய்யங்கார் பெண் ஸ்ரீமதி செல்லம்மாள் தீர்மானத்தை ஆதரித்து மிகத் தெளிவாகவும் ஆழ்ந்த கருத்துடனும் சுருக்கமாகவும் பேசினாள்.

ஹிந்து மகா ஸபை ஸம்பந்தமான தீர்மானத்தை மதுரை அட்வகேட் நாராயணஸ்வாமி அய்யர் பிரேரித்தார். இந்த ஸமயம் நகரத்தார்களில் பிரமுகர்களும் மிகவும் படித்தவர்களும் தனவந்தர்களுமான, பல சிவனடியார்கள், மஹாஸபைக்கு விஜயம் செய்து அலங்கரித்தார்கள். ஸ்ரீமான் மையப்ப செட்டியார் (காரைக்குடி) அவர்கள் இவர்களை வரவேற்றார். ஆத்தங்குடி ஸ்ரீமான் கதிரேசம் செட்டியார் தீர்மானத்தை ஆமோதித்து மிகவும் உணர்ச்சி ததும்பும்படி பிரஸங்கம் புரிந்தார். வேதாகம நம்பிக்கை உள்ள எல்லோருக்கும் தர்மத்தைக் காப்பாற்றுவதில் சிரத்தை இருக்க வேண்டு மென்று குறிப்பிட்டு மிகவும் அழகாய் பேசினார்.

மதஸம்பந்தமாக சினிமாப் படங்களை பரிசீலப்பதற்கு சினிமா தணிகை போர்ட்டில் ஆஸ்தீகர்கள் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டு மென்ற தீர்மானம் பிரேரிக்கப்பட்டது. இதை ஆதரித்து தேவகோட்டை ஸ்ரீமான் சுப்ரமண்யப் செட்டியார் அவர்கள் பேசினார். அவருடைய உபந்நியாஸம் ஸபையோர்களை பரவசமாக்கியது. ஸம்ஸ்கிருதத்தில் அவருக்குள்ள பாண்டித்தியம் ஸபையோரை பிரமிக்கச் செய்தது. இரண்டு பாஷைகளில் விசேஷபாண்டித்தியமுள்ள செட்டியார் அவர்கள் சிறிதும் படபடப்பின்றி ஆழ்ந்த கருத்துக்களுள்ள விஷயங்களை பேசியது ஸபையோர்களின் மனதைக்கவர்ந்தது. இன்னும் பல தீர்மானங்கள் ஸபையில் நிறைவேற்றப்பட்டன.

மதுரை ஸபை காரியதரிசி

ஸ்ரீசங்கரஸுப்ரமண்யன் அய்யர் அட்வகேட் போன்ற பலஊக்கமுள்ள பெரியோர்கள் தீர்மானங்களை ஆதரித்தும் பிரேரித்தும் பேசினார்கள். அக்ராஸநாதிபதி ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் ஸபையோர்கள் பூர்ணமாக தன்னுடன் உழைத்து தீர்மானங்களை நிறவேத்தி வைத்ததற்காக, நன்றி செலுத்தியும் தீர்மானத்தின் மீது பேசியவர்கள் நடந்து கொண்ட முறையை சிலாகித்தும் கூறினார். மஹாண ஸபை காரியதரிசி T. S. ராமஸ்வாமி அய்யர் தலைவர், வரவேற்புக்கமிட்டியார்கள், பிரதிநிகள் விஸிட்டர்கள், வாலண்டியர்கள் முதலானவர்களுக்கு வந்தனோபசாரம் கூறினார். வரவேற்ப்புக்கமிட்டி அக்கிராஸநர் திருவண்ணாமலை தேவஸ்தானம் டிரஸ்டி ஸ்ரீமான் உயர்திரு அழகப்பய்யா அவர்கள் தலைவருக்கும், நடேச அய்யரவர்களுக்கும் மாலையிட்டார். ஷை அழகப்ப செட்டியாருக்கு T. S. ராமஸ்வாமி அய்யர் மாலையிட்டார். தொண்டர் படைகாப்டன் ராதாகிருஷ்ணன் ஸபை ஏற்படுத்த வேண்டியது பற்றி வற்புறுத்தி பேசினார். தேவகோட்டை வித்வான் கிருஷ்ண சாஸ்த்திரிகள் அரசர் பெருமானை ஸ்தோத்திரம் செய்து தர்மத்தை காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்து ஒரு சுலோகம் செய்திருந்தார் அதை விளக்கிப் பேசினார் மங்களாசரணத்திற்குப் பிறகு ஸனாதன தர்மத்திற்கு ஜே! என்ற கோஷம் வானம் பிளக்க மாலை 6 மணிக்கு மஹாநாடு மங்களமாக முற்றிற்று.

அதற்குப் பிறகு ஆஸ்தீகஸ்திரிகள் மஹாநாடு அதே இடத்திலேயே ஆரம்பமாயிற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மஹா நாட்டில் நகரத்தார்கள் விசேஷ சிரத்தையோடு பங்கெடுத்துக் கொண்டதும், கதிரேசம் செட்டியார் அவர்கள் ஒவ்வொரு ஸமயத்திலும் பிராமணர்கள் மட்டும் ஸனாதனிகள் அல்ல, தர்மத்தைக் காப்பாற்றுவதில் ஜாதி வித்தியாஸம் கிடையாது என்று எடுத்து விளக்கிக் கூறியதை ஸபையோர்கள் என்றும் மறக்க மாட்டார்கள். ஸ்திரீகள் மஹா நாட்டிலும் ஆடவர்மஹா நாட்டிலும் மதுரை மீனாக்ஷி அம்மாள் மிகவும் அழகாகப் பேசியது குறிப்பிடத்தக்கது N. R. கிருஷ்ணஸாமி அய்யங்கார் T. S. ராமஸ்வாமி அய்யர் இவர்கள் மஹாநாட்டை சிறக்க நடத்தி வைத்தனர். அழகப்ப செட்டியார் அவர்கள் தனக்குள்ள பல ஜோலிகளையும் மறந்து மஹாநாட்டில் கலந்து கொண்டதைக்கண்டு ஆச்சரியப்படாதார் இல்லை.

தீர்மானங்கள்.

10-உ மஹாநாட்டில் தீர்மானங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுடன், யுத்த முடிவுக்குப் பிறகு இந்தியாவிற்கு வெஸ்ட்மின்ஸ்ட் சட்டப்படியுள்ள குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்கப்படு மென்று கேட்டுக்கொள்ளுவதாக தீர்மானம் நிறைவேறியது.

யுத்தத்திற்கு இந்தியர்கள் உதவிபுரியவேண்டியும், மதவிரோதச் சட்டங்களை ரத்து செய்யவேண்டியும் முக்யமாய் சாரதாச் சட்டத்தையும் ஆலயப்பிரவேசச் சட்டத்தையும் எடுத்துவிட வேண்டு மென்றும் பாகிஸ்தான் திட்டத்தைக் கண்டிப்பதாயும், ஸிந்துவில் ஹிந்துக்களுக்கு ஏற்பட்டுவரும் தீங்குகளை கவர்ண்மெண்டார் தடுக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் ஹிந்து மஹாஸபையுடன் ஸனாதநிகள் சேரும் விஷயமாக ஸ்ரீ நடேசய்யரவர்கள் கடிதப்போக்குவரத்துச் செய்ய அதிகாரம் கொடுப்பதாயும் அனேக தீர்மானங்கள் மஹாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. ந. வி. நி.

தென்னிந்தியாவில் ஆர்ய ஸமாஜ பிரசாரம் வலுப்படுத்த யோஜனை

தென்னிந்தியாவில் ஹிந்து மஹாஸபை வலுக்க ஆரம்பித்திருக்கும் சமயத்தில் இங்கு ஆர்ய ஸமாஜத்தையும் வலுவாக்க ஏற்பாடு நடக்கிறது. சென்னையில் இதற்காக திவான்பஹதூர் வி. பாஷ்யமய்யங்கார் தலைமையில் ஆர்ய ஸமாஜிகளின் கூட்டம் நடைபெற்றது. தமிழ் ஜில்லாக்களில் ஆர்ய ஸமாஜிக் கிளைகளை ஸ்தாபிக்கவும், பிரசாரம் நடத்தவும், ஆர்ய ஸமாஜிக்கோவில் அமைக்கவும் ஏற்பாடு உடனே செய்ய வேணு மென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ஆனந்தாச்ரம ஸம்ஸ்கிருத பாடசாலை மேலக்காவேரி கும்பகோணம்

ஷை பாடசாலை 2—12—40 முதல் மேலகாவேரி சர்வமான்யதெருவு 19. நெ. கிரஹத்தில் நடைபெற்று வருவதால் ஆஸ்திகர்கள் வழக்கப்படி தமது குழந்தைகளை அனுப்புமாறு வேண்டுகிறோம்.

கே. ஆர். வி. சாஸ்திரி.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

விக்ரம- ஷு மார்கழி-மீ 5உ

டாக்டர் மூகர்ஜியின் சிறந்த யோஜனை.

இந்திய ராஜீய நிலைமையானது வகுப்புவாதமென்கிற பெரும் காற்றில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கிறது. ராஜீய விஷயத்தில் ஒவ்வொரு வகுப்பாரும் தம் தம் உரிமைகளைரக்ஷித்துக்கொள்ள, எந்நாளையும் விட இப்போது அதிக விழிப்பும் உழைப்பும் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் தெரிந்ததே. ஆதலால் இந்தியாவில் எல்லா வகுப்பினருக்கும் பாதுகாப்பளிக்கக்கூடிய ஒரு ராஜீய திட்டத்தை அமைத்து வைப்பதில் கவர்ன் மெண்டாரும், ராஜீய ஸ்தாபனங்களும் முயன்று வருகின்றன. ஆயினும் இதுவரையில் யாவரும் ஒற்றுமையுடன் ஏற்கக்கூடிய திட்டமொன்றும் வெளியிடப்படாமலிருந்தது.

இச்சமயத்தில் கல்கத்தா யூனிவர்ஸிடி ஆசிரியரான பிரஸித்தி பெற்ற ஸ்ரீமான் ராதா குமுதமூகர்ஜி வெளியிட்டுள்ள சிறந்திட்டமானது யாவராலும் கவனிக்கத் தக்கதாயிருக்கிறது. ஜனநாயக அரசியலில் வகுப்பு பேதங்களும் மதப்பாதுகாப்பு விஷயமும் குறுக்கிட்டு அதுசீர் குலையாமல் காப்பாற்றப்பட வேண்டுமானல் ஸ்ரீமான் மூர்க்கர்ஜியின் யோஜனையே அதற்கு ஏற்ற திட்டமாக இருக்கிறது.

ஸ்ரீமான் மூகர்ஜி, ஒவ்வொரு வகுப்பாருக்கும் பிரத்யேகமாயுள்ள ஆசாரங்களையும், கொள்கைகளையும் ரக்ஷித்துக்கொடுக்க அரசியல் சட்டத்திலேயே விதிகள் செய்யப்பட்டுவிட வேணுமென்கிறார். அந்தந்த வகுப்பாரின் பழக்க வழக்கங்களில், இதர மதஸ்தர்களோ, தேசியத் தலைவர்களோ பிரவேசிக்க முயன்றால், ஸந்தேஹமும் சச்சரவுமே உண்டாகுமென்று அவர் சொல்லுவது இப்போது பிரத்யக்ஷமாகவே இருக்கிறது. ஆதலால் சட்டத்திலேயே இதற்குப் பாதுகாப்பு அளித்துவிடுவது நல்லதுதான். அவரவர்களுடைய தனிப்பட்ட விஷயங்கள் நிற்க, மற்ற பொதுவான இந்திய ராஜீய விஷயம் முதலானவைகளில் எல்லாவகுப்பாரும் ஏகோபித்து வேலைசெய்ய இதனல் இடமுண்டாகும். ஜாதி மதம், பாஷைமுதலியவைகளில் இந்தியதேசிய விஷயம் தலையிடக் கூடாது. ஒவ்வொரு வகுப்பும் தனது தாய் பாஷையை ஆதரிக்க ஸௌகர்யம் செய்து கொடுக்க வேண்டும்.

முக்யமாக மத விஷயங்களில் ஒவ்வொரு மதஸ்தனும் தன்மதக்கொள்கைக்கு இணங்க நடந்து கொள்ளப் பூர்ண உரிமை கொடுக்கப்பட வேணும். சட்டஸபைகள் வகுப்பு ஆசாரங்களை தங்கள் இஷ்டப்படி மாற்றவோ, ரத்து செய்யவோ, அனுமதி கொடுக்கக்கூடாது. முக்யமாக விவாஹ ஸம்பந்தமான விஷயங்களில் சட்ட ஸபையானது அன்னியர்களின் வோட்டு பலத்தைக் கொண்டு தலையிட்டு மாறுதல் செய்வதென்பது கூடாது. இதுபோன்ற முக்ய விஷயங்களையெல்லாம் அந்தந்த வகுப்பினரின் அபிப்பிராயத்தைக்கேட்டு அதேமாதிரி சட்டத்தில் புகவிட்டுவிட வேணுமென்று ஸ்ரீ முகர்ஜி சொல்லுகிறார்.

ஸ்ரீமான் மூகர்ஜி சொல்லியுள்ள விஷயங்களையே ஸனாதநிகள் வெகு நாளாக வற்புறுத்தி வருகிறார்கள்.

லண்டனில் நடந்த வட்ட மேஜை மஹாநாட்டிலும் ஸனாதநி பிரதிநிதியாயிருந்தவர் மேற்கண்ட அம்சங்களையே பலமாக வற்புறுத்தியிருக்கிறார். அரசியல் திருத்தச்சட்டம் செய்யப்பட்டபோது இந்த விஷயத்தை அலக்ஷ்யம் செய்துவிட்டார்களாயினும் இப்பால் சட்ட சபைகளின் அனுஷ்டான முறையாலும், கக்ஷி கவர்ன்மெண்டின் விபரீத மனோபாவத்தினாலும் மதங்களுக்கு பாதுகாப்புப் போய்விட்டதை ஸர்க்காரும் பொது ஜனங்களும் இப்போது உணர ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே ஸ்ரீமான் மூகர்ஜியின் யோஜனைப்படி கார்யம் செய்ய வேண்டியதே இப்போதைய முக்ய வேலையாகும். இது ஒன்றுதான் தற்காலம் சிறந்த யோஜனை. இதைத்தவிர வேறு எந்த யோஜனையும் நிற்கக்கூடியதாயிராது. எல்லா வகுப்பாரும் மதத்தினரும் ஏற்கக் கூடியதும் இதுவே. இந்தியாவின் ராஜீய சக்கிரம் அமைதியாக சிக்கலன்றி சுற்றிக்கொண்டிருக்கவேண்டுமானல் அதற்கு ஸ்ரீ மூகர்ஜி காட்டிய வழிதவிர வேறு எதுவும் பிரயோஜனப்படாது.

மதுரையில் கூடும் ஹிந்து மஹா ஸபையானது டாக்டர் மூகர்ஜியின் திட்டத்தை யோஜிக்குமா? ஹிந்து மஹா ஸபையானது உண்மையாக வகுப்பு ஒற்றுமையையும், ஹிந்துக்களின் மத—ஸமூஹ உரிமைகளையும் பாதுகாக்க விருப்பமுள்ளதானல் இதைவிட வேறு சிறந்த யோஜனையைத்தயாரிக்க முடியாது. ஹிந்து சமூகத்தினரிடையே பேரும்பாலோராயுள்ள தார்மிக வகுப்பினர் மஹாஸபையிடம் அவநம்பிக்கையும் பயமும் அடைந்து அதினிடம் அபிமானம் காட்ட தயங்குகிறார்கள். ஹிந்து மஹா ஸபையிடம் அபிமானமுள்ளவரும் அதன் தலைவராக மதிக்கப்படுகிறவருமான ஸ்ரீ மூகர்ஜியின் யோஜனையை மதுரை மஹா சபை ஏற்று, வகுப்பு ஒற்றுமைக்கும், மதப் பாதுகாப்பிற்கும், இந்திய ராஜீய அபிவிருத்திக்கும் வழிகாட்டும்படிரி பகவான் அருள் புரிவாரா?

சந்தா குறைக்கப் பட்டிருக்கிறது.

ஆர்யதர்மம் அபிமானிகளுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 25 வது வயதானது இந்த மாஸத்துடன் பூர்த்தியாகி ஜனவரி முதல் 26-வது ஆரம்பமாகிறது. இந்த வெள்ளி ஜூபிலி சுபஸந்தர்ப்பத்தில் நமது பத்திரிகாபிமானிகளுக்கு ஓர் ஸந்தோஷகரமான செய்தியை வெளியிட நிர்வாஹிகள் நிச்சயித்திருக்கிறார்கள். அதாவது அடுத்த புதிய வருஷத்தில் இப்பத்திரிகையின் சந்தாவனது 2—4—0 வாகக் குறைக்கப் பட்டிருக்கிறது.

25 வர்ஷகாலம் இப்பத்திரிகை எவ்வளவோ கஷ்டங்களையும், நஷ்டங்களையும் பொருள் படுத்தாமல் ஸநாதன தர்மத்திற்கு கைங்கர்யம் செய்து வருகிறது. திரவிய லாபத்தை நோக்கமாகக் கொண்டால் இப்பத்திரிகையை நடத்திக்கொண்டு வரமுடியாது. தர்மபிரசாரமாகிய முக்ய நோக்கம் நிறைவேறுவதற்காகவே இப்பத்திரிகையை இன்னும் ஏராளமான பேர்கள் வாசிக்கும்படி செய்ய வேண்டியது அவச்யமாகிறது. இந்தக் காரணத்தைக் கொண்டுதான் சந்தாவை மேற்கண்ட விதம் குறைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு ஆர்யதர்மத்தின் திரவிய நிலைமை புஷ்டியாயிருப்பதாக திருப்தியடைந்து விடக் கூடாது.

சந்தாவைக் குறைத்ததால் ஆர்யதர்மத்தின் திரவிய நிர்வாஹத்திற்கு சிரமம்தான் ஏற்படும். இந்த சிரமத்தை சந்தாதார்களின் அபிருத்தி ஒன்றால் தான் ஸமாளிக்க வேண்டியிருக்கும். ஆதலால் ஒவ்வொரு சந்தாதார்களும் வேறு பல சந்தாதாரர்களை சேர்த்து உபகரிக்கவேண்டும். மனிதவாழ்க்கையில் பிரதி வருஷமும் எவ்வளவோ திரவியங்கள் தெரிந்தும் தெரியாமலும்வீணுகச் செலவாகிவிடுவதை அறியாதாரில்லை இந்த 2—4—0 ஒரு தர்மகார்யத்திற்காக செலவு செய்வது ஏழைகளுக்குக்கூட பாரமாயிருக்க நியாயமில்லை. ஆகையால் புதிய வருஷத்தில் ஏராளமான அபிமானிகள்முன் வந்து ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இனி வருஷத்தில் 48ஸஞ்சிகைகள் தான் கொடுக்கப்படும். பத்திரிகையின் பக்கங்கள் சாதாரணமாய் எட்டாகவேயிருக்கும். புதியவருஷத்தில் பத்திரிகையில் பற்பல சிறந்த வியாஸங்களை வெளியிட முயற்சித்து வருகிறோம். இந்த கார்யத்தில் அறிவாளிகள் நமக்கு உபகாரமாயிருந்து நல்லவிஷயங்களை எழுதிகொடுக்கும்படி வேண்டுகிறோம். பத்திரிகையின் நிலைமையையும், பக்கங்களையும் கவனித்து வெளியூர் நிருபர்களும் கூடிய வரையில் விஷயங்களைச் சுருக்கமாக எழுதி நம்முடன் ஒத்துழைக்கக் கோருகிறோம்.

ஸ்ரீ அய்யாதுரை அவர்கள் எழுதிய புஸ்தகங்கள்.

ராமாயணம் யோகசாஸ்திர நிருபணம்.		0—8—0
பாகவதம்	do	0—4—0
கிருஷ்ண சரிதம்	do	0—2—0
பொதுமத போதினி		0—2—0

ஹிந்து மஹா ஸபையும் ஸனாதநிகளும்.

மஹாமஹோபாத்யாய பிர்ம்மஸ்ரீ
அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளின்
அபிப்ராயம்:—

ஹிந்து மஹாஸபையாருக்கு ஸ்ரீமான் என். நடேசய்யரவர்கள் ஓர் பஹிரங்கக் கடிதம் எழுதியிருப்பதையும் பிறகு திருவண்ணமலை மஹா நாட்டில் இவ்விஷயமாக ஸ்ரீ நடேசய்யரவர்களுக்கு ஆதரவளித்துச் செய்யப்பட்ட தீர்மானமும் கவனிக்கப்பட்டது.

ஹிந்துமஹா ஸபையின் கொள்கையில் ஸனாதந தர்ம விருத்தமான அம்சமிருக்கிறதாவென்பதும், அதில் தார்மிகர்கள் சேரலாமா கூடாதாவென்பதும் தர்மாசாரியர்களே நிச்சயித்து ஆக்ஞையிட வேண்டிய விஷயமென்று எனக்குத் தோன்றுகிறது. ஸ்ரீநடேசய்யரவர்கள் ஹிந்து மஹா ஸபையாருடன் நடத்தும் கடிதப்போக்கு வாத்து விஷயங்களை நமது தர்மாசாரியர்களுக்கும் அனுப்பி அவர்கள் மூலம் ஒரு நியமனம் செய்யப்பட்டால் அது தார்மிகர்களை வரையும் கட்டுப் படுத்தக்கூடியதாயும் பலமுள்ளதாயுமிருக்கும்.

மதம் மாறியவர்களை சுத்தி செய்து மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்ப்பதைப் பற்றிய, விஷயத்தில் ஸ்ரீ நடேசய்யரவர்கள் ஹிந்து மஹா ஸபைக்கு நிபந்தனை விதிப்பதிலும் கவனிக்கவேண்டிய அம்சமிருக்கிறது. வர்ணாச்ரமிகள் மத மாற்றச் சுத்தியை அடியோடு தள்ளிவிடவில்லை. குறிப்பிட்ட சில காலத்திற்குள்ளாக மத மாற்ற சுத்திசெய்ய சாஸ்திரத்தில் இடமிருப்பதாக, காசீ அகில இந்திய பிராம்மண ஸம்மேளனத்திலும் சென்னை அகில இந்திய வித்வத்பரிஷத்திலும், வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்திற்கு அங்கமாக நடந்த பரிஷத்துக்களிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதை அங்கீகரித்து அநேக தர்ம சார்யர்களின் கையெழுத்தும் பெறப்பட்டிருக்கிறது. ஆதலால் மத மாற்ற சுத்தியை ஹிந்து ஸபை விட்டுவிடவேணுமென்று நிபந்தனை விதிப்பதில் சங்கடமிருக்கிறது.

ஸனாதநிகள் ஹிந்து மஹா ஸபையை அலக்ஷ்யம்செய்யமுடியாது. காங்கிரஸின் ஆரம்பகாலத்தில் ஸனாதநிகள் அலக்ஷ்யமாயிருந்துவிட்டதால்தான் இப்போது தார்மிகர்கள் சிரமப்படவேண்டியிருக்கிறது. ஆகையால் ஹிந்து மஹா ஸபையை இப்போதே கவனித்து நடக்காவிடில் பிற்காலத்தில் அதனால் நமக்கு ஏற்படக்கூடிய தீங்குகளை நிவிர்த்திக்கமுடியாமல் கஷ்டப்படநேரும்.

ஹிந்துக்களில் பெரும்பாலோர் ஸனாதநிகளிருக்கிறார்கள். ஆதலால் ஸநாதநிகளும் ஹிந்துக்களே. ஸனாதநிகள் மஹாஸபையில் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் ஹிந்துமஹா ஸபையின் கார்யம் ஸனாதநிகளின் பெயராலும் செய்யப்படுவதாகவே நினைக்கப்படும். ஆதலால் ஸனாதநிகள் தங்கள் கக்ஷியை தேசத்தாருக்கு ஸ்பஷ்டமாக்கி விடவேணும். ஹிந்து மஹா சபை ஹிந்துக்களின் ராஜீய ஸமூஹ சம்பந்தமான லௌகீக காரியங்களையே கவனிப்பதாக இருக்கவேணும். மத சம்பந்த விஷயங்களில் சட்டம் செய்யவோ, அபிப்பிராயம் கூறவோ அதற்கு அதிகாரமிருக்கக்கூடாது. மத ஸம்பந்தமான விஷயத்தை அந்தந்த ஸமூஹத்தினரின் முடிவுக்கோ, மதாசாரியர்களின் முடிவுக்கோ விட்டுவிடவேணும். மஹா ஸபையில் ஜைனர் பௌத்தர். ஆர்யஸமாஜி முதலிய பிரிவினர்கள் சேருவதுபோல் ஸனாதநிகளும் சேரலாம். ஸனாதநிகளைப் பாதிக்கும் விஷயங்களை ஸனாதநிகளைக் கேட்டே முடிவு செய்யவேண்டும். ஒரு விஷயமானது மத ஸம்பந்தமுள்ளதா இல்லையாவென்பதை மதாசாரியர்களே நிச்சயிக்கவேணும். மஹா ஸபை நிர்ணயம் சொல்லக்கூடாது.

முஸ்லீம் லீக்கில் அந்தமதத்தைச் சேர்ந்த பலபிரிவினரும் அங்கத்தினராயிருக்கிறார்கள். முஸ்லீம்களின் லௌகிக உரிமைகளையே அது கவனிக்க அதிகாரம் பெற்றிருக்கிறது. மத விஷயத்தில் பிரவிர்த்திப்பதில்லை. ஷியா, ஸுன்னி, அஹரர்போன்ற பற்பல பிரிவினர்களின் மதப்பழக்க வழக்கத்தைப் பற்றி லீக் பேசுவதில்லை. அதுபோலவே ஹிந்து மஹா ஸபையும் இருக்கவேணும்.

இதைப்போன்ற வேறு பலவிஷயங்களுமிருக்கின்றன. இவைகளைப் பற்றி மதுரையில் ஹிந்துக்களிடையே ஸனாதநிகள் தீவ்ர பிரசாரம் செய்து தங்கள் அபிப்பிராயத்தை ஹிந்து மஹா ஸபையார் அங்கீகரிக்கும்படி செய்ய வேண்டியது அவச்யம். மதுரையில் அத்தகைய பிரசாரம் நடத்தவும், ஹிந்து மஹா ஸபையிலேயே போயிருந்து நமது கக்ஷியை வெளிப்படுத்தவும் நான் தயாராயிருக்கிறேன். மற்ற ஸனாதநிகளும் இதற்காக முன்வரவேணும்.

சந்தாதார்களுக்கு அறிவிப்பு

ஆர்யதர்மம் பத்திரிகையின் அடுத்த ஸஞ்சிகையுடன் இவ்வருஷம் பூர்த்தியாகி விடுகிறது. புதிய வர்ஷத்திற்கான சந்தாவை சந்தாதார்கள் சீக்கிரத்தில் அனுப்பி எப்போதும் போல் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுகிறோம்.

புதிய வருஷத்திற்கு சந்தா 2—4—0 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அபிமானிகள் தாமஸியாமல் சந்தாவை அனுப்புவதுடன் அங்காங்கு புதியசந்தாதார்களையும் சேர்த்து உதவி புரியக்கோருகிறோம.

ஏற்கனவே புதியவர்ஷத்திற்கும் சந்தா செலுத்தி விட்டவர்களுக்கும் 2—4—0 வீதம் வரவுவைத்துக் கொள்ளப்பட்டு பாக்கித் தொகையை அடுத்த வருஷத்தின் கணக்கில் வைத்துக்கொள்ளப் படும்.

மானேஜர்.

ஆத்தன்குடி பாராயணம்

விக்ரம:ஸு கார்த்திகை-மீ முதல் ப்ரும்மஸ்ரீ வி. ஒய் கணேசகனபாடிகள் (வேதபாடசாலை ஆசிரியர்) S. வெங்கட்டராம கனபாடிகள் (அத்யானபட்டர்) இருவர்களின் நன்முயற்சியில் வித்யார்த்திகளையும் கொண்டு ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஸந்நிதானத்தில் மாலை 6-மணி முதல் யஜுர் வேத ஸம்ஹிதா பாராயணமும், கிரமபாராயணமும் சிரத்தையுடன் நடை பெற்று வருகிறது. ஆஸ்திகர்கள் சிரவணம் செய்து நற்பயனை அடைந்து வருகின்றனர்.

(ஒ.கி.)

திருவிசநல்லூர்.

ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகள் ஆக்ஞைப்படி, திருவிசநல்லூரில் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள் ஸன்னதியில் நாளது கார்த்திகை-மீ 25-உ செவ்வாய் கிழமை ஏகாதெசியன்று, ஸ்ரீ மடம் முத்ராதிகாரி ஆயுர்வேத வைத்யர் டி. வி. சுப்பிரமணிய அய்யாவால் ஸ்ரீமத் பாகவதத்தில் "குசேலோபாக்யானம்" உபன்யஸிக்கப் பட்டது.

ஸ்ரீ லோக குரு விஜய வைபவம்.

சேங்காலிபுரம்.

ஸ்ரீ சிவகாளீபுரம் என்ற சேங்காலிபுரம் கிராமத்திற்கு ஸ்ரீ பரமாச்சாரியாள் சமீபத்தில் விஜயம் செய்து அனுக்ரஹித்த காலத்தில், ஆஹிதாக்னிகளும், பண்டிர்களும், பிரபுக்களும் வரவேற்ற பொழுது பிரம்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள் உபன்யஸித்த பிறகு, பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் தம்பி பிரம்மஸ்ரீ நாராயண தீக்ஷிதர் அவர்கள் பெரியவாளுடைய ஆகமனத்தின் புண்ணியத்தைப்பற்றி வெகு அழகாக உபன்யஸித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ பாகவதத்திலிருந்து மகாபலி பகவத் சரணத்தைத் தீர்த்தத்தினால் அபிஷேகம் செய்து, அர்ச்சனம் செய்து தீர்த்தத்தை சிரஸில் தரித்துக்கொண்டு எங்கள் பித்ருக்கள் இன்றுதான் திருப்தி யடைந்தார்கள். எங்கள் குலம் இன்றுதான் பாவனம் ஆயிற்று. இன்றுதான் எனது யாகம் பூர்த்தி யடைந்தது. என் அக்னிஹோத்திர அக்னிகள் இன்னுதான் நன்றாக ஹோமம் செய்யப்பட்டது என்று சொல்லியிருக்கும் ஸ்லோகத்தை நாராயண தீக்ஷிதர் சொல்லும் காலத்தில் சர்வ ஜனங்களும் ஆனந்த பாஷ்பத்துடன் மஹா பலிக்குக் கிடைத்த பாக்கியம் இன்று தங்களுக்குக் கிடைத்ததாக நினைத்தார்கள். ஸ்ரீ பரமாச்சாரியாள், தீக்ஷிதர் அவர்களை மறுபடியும் மேற்படி சுலோகத்தைச் சொல்லும்படிக் கேட்டு ஆனந்தித்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. பிறகு கிராமத்தில் ஊர்வலமாக பெரியவாளை அழைத்து வரும்பொழுது பிரம்மஸ்ரீ நாராயண வாஜபேயர் அவர்கள் கிரஹத்தில் வந்து அக்னிஹோத்திர தரிசனம் செய்து வேதி மத்தியில் பூஜை செய்யும் பலனை வர்ணித்தது மிகவும் ஆனந்தத்தைக் கொடுத்தது. ஸ்ரீ வாஜபேயர் அவர்கள் அப்பொழுது பெரியவாளைப் பூஜித்து மிகவும் மனமகிழ்ந்தார்கள். ஸ்ரீ பரமாச்சாரியாள் ஆக்ஞைப் பிரகாரம் ஏகாதசி உபன்யாசம், புரோவிஷனல் ஸ்டோர்ஸ் திண்ணையில் மங்களமாக ஆரம்பிக்கப் பட்டது. ஸ்ரீ பரமாச்சாரியாள் கிராமத்தில் எல்லோருக்கும் ஆசிகூறி புறப்பட்டார்கள்.

அய்யா தீக்ஷிதர்.

இராமேசுவரம் தார்மிகயுவக் சங்கம்

இராமேசுவரம் தார்மிக யுவக்சங்கத்தின் ஆதரவில் விக்ரமஸு கார்த்திகைமீ 10தேதி (25-11-40) தேதியன்று ஷை சங்க காரியாலயத்தில் வழக்கம்போல் நடந்துவரும் ஏகாதசிவிழாவில் P. மகாதேவ சாஸ்திரியள் அவர்களால் "ஸோம வாரத்தின் மகிமை" என்னும் விஷயம் பற்றி உபன்யஸிக்கப் பட்டது.

தார்மிகயுவக் சங்கத்தின் ஆதரவில் விக்ரமஸு கார்த்திகைமீ 25. (10-12-40)தேதியன்று தினம் ஏகாதசி விழாவில் மு. வ. கோபால சாஸ்திரியவர்களால் பகவத்கீதை முதல் அத்தியாயம் பாராயணம் செய்யப்பட்டு ஷை அத்தியாயத்தினுடைய சாராம்ஸத்தை அன்றையதினம் P.மஹாதேவசாஸ்திரியளவர்களால் உபன்யாஸம் செய்யப்பட்டது. பிற்பாடு சங்க காரியதரிசியால் சட்டதிட்டங்கள் எடுத்து உறைக்கப்பட்டு தீபாரதனையுடன் வாழ்த்துகீதம் பாடப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

ஷை சங்கத்தின் டிஸம்பர் 3 தேதி மஹா ஸபை தீர்மானத்தின்படி தனுர்-மீ 30 நாளும் நடத்த தீர்மானித்து. ஷை உத்ஸவம் விமரிசையாக காலை முதல் நடைபெறும்.

மு. வ. சேஷாத்திரியார்,
காரியதரிசி

தெய்வ நெறிக்கழகம்.

விழிப்புரம்.

ஆர்யதர்மம் விக்ரம-௵ கார்த்திகை-மீ 27-௳ (12—12—1940) வாரப்பதிப்பில் ஆறுவது பக்கம் இரண்டாவது பத்தியில் "உதாஸீனக் குறிப்புகள்" என்ற தலைப்பின் கீழ் சுந்திரதாஸன் இச்சங்கத்தை தாக்கியிருக்கிறார்.

இந்த சங்கத்தை ஸ்தாபித்த சுவாமி சிவானந்தர், நமது தக்ஷிண தேசத்திலே பிரசித்தமடைந்திருந்த பெரியாராகிய அப்பைய தீக்ஷிதர் வம்சத்திலே அவதரித்தவர் சிருங்கேரி ஸ்ரீ சங்கரமட சார்பில் ஸரஸ்வதிகள் பட்டம் பெற்று பன்னிரண்டாண்டுகள் கடுந்தபம் செய்தவர். சிஷ்டர்களுள் சிஷ்டர். இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் அஹிம்ஸை, ஸத்யம், பிரும்ம சர்யம் முதலிய நற்குணங்களுடையவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்கின்றனர். இச்சங்கம் எந்த விதத்திலும் ஸநாதனதர்மத்திற்கு விருத்தமானதல்ல. இச்சங்கத்தின் சென்னைமாகாண மகாநாடு போன மார்கழி மாதம் (கிருஸ்மஸ் விடுமுறையில்) விழுப்புறத்தில் கூடிய பொழுது ஸநாதனிகளான தர்மரக்ஷாமணி K. பாலசுப்பிரமணிய அய்யர், திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், ஸாஹித்ய வாங்முக பூஷண ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா, வைதிகதர்ம ரக்ஷக அனந்தராம தீக்ஷிதர் முதலியவர்கள் உபன்யாஸங்கள் நடத்தினார்கள்.

அந்த மகா நாட்டிற்கு செங்கற்பட்டு வேத பாடசாலை பிள்ளைகளை இரயில் சார்ஜ்குடுத்து நான் வரவழித்திருந்தேன். அப்பிள்ளைகளை பார்த்தால் இந்தவூர் ஆஸ்திகர்களுக்கு ஓர் பாடசாலை ஏற்படுத்த ஸ்திரபுத்தி உண்டாகுமென்ற எண்ணந்தான் என்னை அந்த பிள்ளைகளை வரவழிக்கத்தூண்டிற்று. இம் மகாநாடு நடப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் இவ்வூரில் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரால் பாகவத ஸப்தாஹம் நடத்தப்பட்டது. அப்பொழுது இவ்விடம் ஓர் ருக் வேதபாடசாலை ஆரம்பிக்க ஏற்பாடாகிற்று அதை நடத்த ஸ்ரீ மஹாதேவய்யர் முன் நிற்பதாக நமது ஆர்யதர்மத்திலும் பிரசுரமாகி இருக்கிறது. ஆனால் அது பேச்சிலேயே புகைந்து விட்டது. இதுதகவல் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரிடம் நீங்கள் தெரிந்து கொள்ளலாம் இவ்வருடம் இச்சங்கத்திற்கு மகா-ள-ஸ்ரீ வெங்கடரமணய்யர் அக்ராசனராகவும், உதரஸீனக் குறிப்புகளில் வேதபாடசாலையை ஆஸ்திகர்கள் ஸகாயத்தைக் கொண்டுநடத்திவருவதாககுறிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ராகவையங்கார் பிரதம காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இவர்களால் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரை கொண்டு இராமாயண பக்ஷாஹம்ஏற்படுத்தப்பட்டது. இச் சங்கத்தினுதாவில் இராமாயண பிரவசனம் அதி விமரிசையாக ஹனுமார் கோவில் பிராகாரத்தில் நடத்தப்பட்டது. அவ்வமயம் இச் சங்கத்தினுதரவிலேயே கிருஷ்ணயஜுர் வேதபாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தீக்ஷிதா இராமாயணம் சொல்லிக் கொண்டிருக்கையில் ஓர் இரவு வைதிக தர்மஸங்க பரமஹம்ஸ பிக்ஷுக்கள் இராமாயணம் கேட்க வந்திருந்தார்கள். அவரை தீக்ஷிதர் சில வார்த்தைகள் சொல்ல சொன்னார் இச்சங்கத்தினுதவில் நடக்கும் கூட்டத்தில் இச்சங்கத்தை தாக்கி ஓர் பிரசங்கம் செய்தார்.

இதற்காக தீக்ஷிதர் வருத்தப்பட்ட விஷயம் விழுப்புர வாஸிகளெல்லோரும் அறிவர். இந்த பிக்ஷுக்கள் இவ்வூரில் ஓர் வேத பாடசாலை நடக்கப்போவதைபற்றி கேள்விபட்டதாகவும், அந்த பாடசாலையை இச்சங்கத்தின் கீழ் நடத்த கூடாதென்றும் பேசினார், பிறகு மகாதேவய்யர் வீட்டில் ஓர் கூட்டம் போட்டு அதிலும் இதே தோரணையில் பேசினார். அப்பொழுது அவர் விரஸமாகச் சொன்ன ஓர் சங்கதி என்மனதில் பசுமரத்தாணி போல் நன்றாக பதிந்திருக்கிறது. ஆனால் கடைசியில் இந்த தெய்வ நெறிக்கழகத்தின் கீழ் பாடசாலை நடத்த நிச்சயித்து, பஞ்சாதி சொல்லி, இதே பிக்ஷுக்கள் ரூ. 3 அ, 3(3-3-0)கழக அக்ராஸனரிடம் [ஸ்ரீமான் வெங்கடரமணய்யரிடம்] கொடுத்தார். அவர் அந்த தாம்பூலத்தை கழக பிரதம காரியதரிசி இராகவையங்காரிடம் கொடுத்தார். இதையாரும் மறுக்க முடியாது. இப்பாடசாலையை காரியதரிசி ஸ்ரீ இராகவைய்யங்கார் தன் கீழ் ஆபீஸில் வேலை செய்யும் மகாதேவய்யரைகூடவைத்துக்கொண்டு நடத்திவருகிறார். கழகத்தின் சார்பிலேயே நடக்கிறது. இன்னும் கழகத்திற்கு ஸ்ரீ இராகவையங்கார்தான் காரியதரிசி. ஆதலால் இப்பாடசாலைக்கும் தெய்வ நெறிகழகத்திற்கு ஸம்பந்தம் பொருந்தாது என்று சொல்லுவது ஒவ்வாது.

டாக்டர் வெ. சு. மணி.

2

12—12—1940 ஆர்யதர்மம் பத்திரிகையில் உதாஸீனக்குறிப்புகள் என்ற தலைப்பின் கீழ், "சிஷ்டா சாரத்திற்கு ஒவ்வாத நிலைமையில் யோகப்பயிற்சி. பிர்மசர்யம், ஸமூக கைங்கர்யம் இதுகளையே பிரதானமாகக் கொண்டு ருஷீகேசத்து ஸபையானது பல இடங்களில் நடப்பதாகத் தெரிகிறது" என்று கண்டிருக்கிறது. அவ்விதம் சில இடங்களில் சில ஸபைகள் நடந்தன வென்பது உண்மைதான் என்று மிகவும் மனவருத்தத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சிஷ்டா சாரத்திற்கு ஒத்த முறையில் ஷை ஸபைகள் நடக்குமாறு திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றனவென்றும் அது விஷயத்தில் அழிக்கும் கண்டனமாக destructive criticism) மட்டுமில்லாமல், "அவனன்றி ஓரணுவும் அசையாது," "அவனருளால் நடந்து வரும் பல நற்சபைகளில் இச்சபையும் ஒன்று" என்ற நயபிக்கையுடன் சொல்லப்படும் நல்லுபதேசங்கள் மிகவும் வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அதிகாரிகள் தகுந்த கவனம் எடுத்துக்கொள்வார்கள் என்றும் விக்ஞாபித்துக் கொள்ளப்படுகிறது.

விழுப்புரம் ஸம்பந்தப்பட்டவரையில்ஷை ஸபையானது பூர்ணமாய் திருத்தி அமைக்கப்பட்டு அதிகாரிகள் வைதிக தர்மத்தில் மிகுந்த பற்றுள்ளவர்களாகவும் பிர்மஸ்ரீ அநந்தராம தீக்ஷிதர் ஸோமதே தேவசர்மா முதலியபண்டிதர்களை வரவழைத்து புராண ப்ரவசனம் முதலிய ஏற்படுத்தியும், தாரக நாம மஹா மந்த்ர பஜனை மண்டலங்கள் ஏற்படுத்தி பஜனை முதலிய நற்கார்யங்கள் பல நடக்கும்படி செய்துக்கொண்டும், வைதிக தர்ம ஸங்க அங்கத்தினர்களாக இருந்து வருகிறார்கள். ஸ்ரீ பாதராஜர் நேர்மேற்பார்வையில் நடக்கும் திருக்கழுக்குன்றம் ஸ்ரீ யக்ஞேசுவர தீக்ஷிதர் அவர்கள் பாடசாலையில் போல், விழுப்புரம், செங்கல்பட்டு முதலிய இடங்களில் நடக்கும் பாடசாலைகளில் பிக்ஷாடனம் குருகுலவாஸம் முதலிய தர்மங்கள் நடைபெறுமலிருப்பதற்கு, ஷை பாடசாலைகள் மற்றொரு சபையின் ஆதரவினும் நடந்து வருவது காரண மில்லையென்றும் நகரங்களில் வைதிக வெளகிக ஸௌகர்யங்கள் குறைவாயிருப்பதே காரணம் என்றும் எனது சிற்றறிவிற்கு தோன்றுகிறது.

ஷை ஸபையின் ஆதரவிலும் பாடசாலை நடப்பதில் அதிருப்தி இருக்கும் பக்ஷத்தில் அவர்கள் நேர் மேற்பார்வையிலேயே நடக்கும்படி ஸ்ரீஜகத்குரு அவர்களுக்கு விக்ஞாபித்துவிட்டு, ஸபையின் முக்ய லக்ஷ்யத்தைக் கடைப்பிடித்து, இதர பிரதான கார்யங்களில் கவனத்தைச் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஷை பாடசாலை யாருடைய மேற்பார்வையில்நடந்த போதிலும் சிஷ்டா சாரத்திற்கு விரோதமில்லாமல் வைதிகதர்ம ஸங்க பிர்ம சர்யாச்ரமங்கள் எங்கும் வளர்ந்தோங்க வேண்டும் என்பதே நமதுபிரார்த்தனை. அத்யாபகர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு அவர்கள் ஆக்ஞையின் பிரகாரம் ஔபாஸனம் முதலிய ஸ்மார்த்த தர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டு அத்யாபகராக இருந்து வரவேண்டும். பாடசாலை நடத்தும் ஸபை அந்த விஷயத்தை கவனித்து தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும்தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஸ்ரீ புடார்ஜுன சர்மா,
விழிப்புரம்.

[இந்த விவாதமானது இப்பத்திரிகையில் இத்துடன் நிறுத்தப்படும்.]

பத்திராதிபர்

இலந்துறை

கார்த்திகை மாத உத்ஸவங்கள்.

இவ்வூர் பெரிய கோவிலில் வழக்கம் போல இவ்வாண்டிலும் ப்ரதி ஸோமவாரங்களிலும் ஏராளமான தீபாலங்காரமும், நான்கு செவ்வாய்க்கிழமை களிலும் தீர்த்தவாரி உத்ஸவமும் நன்கு நடைபெற்றன.

கடைசிச் செவ்வாய்க கிழமையாகிய கார்த்திகைமீ 25௳ செவ்வாயன்று காலையில் ஸ்ரீ விநாயகாதி பஞ்சமூர்த்திகளும் தத்தம் வாஹனங்களில் திவ்யாபரண புஷ்பாலங்காரங்களுடனும் கோனேரிராஜபுரம் முதலிய இடங்களிலிருந்து விஜயஞ்செய்திருந்த வைதீகர்களின் மனோகரமான வேத கோஷத்துடனும் உள்ளூர் வெளியூர் வாத்தியக் கச்சேரிகளுடனும் வீதிவலம் வந்து பகலில் தீர்த்தவாரி நடந்து ராத்ரியும் பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் ஸ்ரீ அபிராமி அம்பிகைக்கு உள்ளூர் "ஸமரஸ குடீரம்" ப்ரம்மஸ்ரீ சிவார்ய கங்கா ஜடேச சர்மா அவர்களால் சுமார் சென்ற 40 வருஷங்களாக இடையறாது ஈச்வரக்ருபையால் நடைபெற்று வருகிற அத்யத்புதமான திவ்ய சந்தனக்காப்பு அலங்காரக்காட்சியும் இரண்டு காலங்களிலும் பக்த கோடிகளுக்கு ஷட்ரஸோபேதமான ப்ராம்மண ஸந்தர்ப்பணையும் மிகச் சிறப்பாக நன்கு நடை பெற்றதன்றி.

27௳ கார்த்திகை மஹாதீப உத்ஸவமும் நன்கு நடைபெற்று 29௳ விடயாற்றி உத்ஸவமும் நடைபெற்று (ஐப்பசி அமாவாஸையன்று வஸந்த மண்டபத்திற்கெழுந்தருளிய ஸ்ரீ ஸுப்ரமண்ய மூர்த்தியுள்பட) பஞ்சமூர்த்திகளும் 'ஸ்கந்த மண்டலபூஜை' பூர்த்தியாகி பௌர்ணமியன்றிரவு ஆஸ்தான மண்டபத்திற் சென்று வீற்றிருந்தனர். இந்த மண்டல காலமும் ஸன்னதியில் ஸ்ரீ சிவாசார்ய சர்மா அவர்களால் ஸ்காந்தம் முதலிய புராண ப்ரவசனம் நாள்தோறும் நடைபெற்று வந்ததும், பக்த கோடிகள் ச்ரவணஞ் செய்து ஆனந்த மடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

(ஒ-கி.)

ஹிந்துக்களின் விவாஹ முறை

மதம் அளித்த புதையல்

மேல் நாட்டு நாகரீகம் பழைய வழக்கங்களை:— நல்லது கெட்டது எல்லாவற்றையும் தகர்த்துக்கொண்டு வரும்பொழுது மிகவும் புனிதம் வாய்த்தஹிந்து மணமுறையில் கூட சிலர் தலையிட்டு சட்டம் இயற்ற முன் வருகிறார்கள். ஸ்திரீகள்சுதந்திரம் என்றபேரால் கிளர்ச்சி நடக்கும் இந்தசமயத்தில் ஸ்ரீ எஸ். பி. திருவேதி போன்ற அறிஞர்களின் வார்த்தைகள் சிந்திக்கக்கூடியவை.

கடவுளுக்கு மட்டும் வழிபாடு செய்ய வேண்டும் என்று ஹிந்து மதம் கூறுகிறது, ஆனால் கடவுளை அறிய சிலரால்தான் முடியும். ஆகையால் அவர்கள் கடவுள் ஓர் இடத்தில் உறைவதாக மனதில் ஊர்ஜிதம் செய்து அந்த நம்பிக்கையை வளர்த்து அதன் மூலம் முக்தியடையமுடியும். உண்மையென்ன வென்றால் கடவுள் எங்கும் இருக்கிறார், எல்லா இடத்திலும் தோன்றுகிறார் என்பதுதான். எங்கே நாம் அவர் இருப்பதாக நினைக்கிறோமோ, அங்கே அவரை காணலாம். ஆண்களுக்கு அவர்கள் வயதுக்கேற்ப, பகவானை எப்படி வழிபடவேண்டுமென்று நியதிகள் இருக்கின்றன. ஆனால் ஸ்திரீகள் விஷயத்தில் ஒவ்வொரு நிமிஷமும் அவர்கள் நினைத்து வழிப்பட்டு சேவைசெய்து அதன் மூலம் முக்தியடைய மார்க்கம் இருக்கிறது.

நம்நாட்டுஸ்திரீகள்.

மிருகத்தனமான ஆசைகளைப் பூர்த்திசெய்துக்கொள்வதோ அல்லது பிரஜாவிருத்தி செய்வதோ ஹிந்துக்கள் கல்யாணங்களின் நோக்கமல்ல. ஓர் மனிதனுக்கு இடைவிடாத சேவை செய்து, அதனால் ஓர்பெண் ஸாயுஜ்ய பதவியடைய உதவுவதுதான் கல்யாணங்களின் நோக்கம். மனைவிதன் கணவனையே தெய்வமாக மதித்து தன்கடமைகளைத் தவறாமல் செய்தால் அவள் வைகுந்தத்தை அடைகிறாள். ஓர் ஹிந்து ஸ்திரீயின் கௌரவமும், குடும்பதோரணையும், ஆத்மீக உயர்வும் வேறு எந்த நாட்டு மங்கையரிடமும், காணப்படுவதில்லை. வேறு நாட்டு மங்கையர் சாஸ்திர அறிவிலும் சுபிக்ஷத்திலும் மேன்மை யடைந்திருந்தால் கூட, உலக இன்பங்களை அடைவதில் அவர்கள் வாழ் நாட்களை அர்ப்பித்து விட்டார்கள். பிரதிதினமும் கோர்ட்டில் அடிபடும்விவாகரத்து கோரிக்கைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

கட்டுப்பாட்டின் கருத்து.

மனிதனும் ஸ்திரீயும் வேறு பட்டவர்கள் அல்ல, தெய்வீக சரீரத்தின் இரு பகுதிகளாக அவர்கள் இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அவசியமானவர்கள். அவர்களுக்குள் உயர்வோ தாழ்வோ கிடையாது. ஆனால் சரீர மனசம்மந்தமான சில வித்தியாசங்கள் இருப்பதால் மனிதனுக்கும் ஸ்திரீக்கும் வேறுபாடான கடைமைகள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. மனிதனிடம் சிந்தனை உயர்வு இருக்கிறது. ஆனால் பெண்ணிடம் உணர்ச்சி அம்சம் விருத்தியடைந்து இருக்கிறது. மேல்நாட்டு சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் ஆணிடமிருந்து சூரிய கிரணங்கள் வெளிப்படுவதாகவும், பெண்ணிடமிருந்து சந்திர கிரணங்கள் வெளிப்படுவதாகவும் கண்டு பிடித்திருக்கிறார்கள். பெண் உணர்ச்சி வசப்பட்டவள் ஆண்சிந்தித்து ஆராய்ச்சி செய்யும் சக்தி உள்ளவன். இதனால், பெண்களுக்கு யோசிக்கும் சக்தியே இல்லை என்பது அர்த்தமல்ல. சில பெண்கள் அதிக யூகசாலிகளா யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பொதுவான நியதியிலிருந்து விலக்கானவர்கள்தான். உபநிஷத்தில் தோன்றும் மைத்ரேயி, சுலபா போன்ற பெண்மணிகளை இதற்கு உதாரணங்களாகச் சொல்லலாம். ஆனால் பெரும்பாலான பெண்மணிகள் உணர்ச்சி வாய்ப்பட்டவர்கள். ஆகையால்தான் அவர்களுக்கு எற்பட்டிருக்கும் வேலைகள் விருத ரூபங்களாக இருக்கின்றன. அவர்கள் உணர்ச்சி வலையில் அகப்பட்டு தவறுசெய்யக்கூடாதென்ற நோக்கம் கொண்டே ஹிந்து சாஸ்திரங்கள் ஸ்திரீகளுக்கு தனியான நியதிகளைக் கூறுகின்றன. ஸ்திரீகளைக்கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கியதன் அடிப்படையான கருத்து என்னவென்றால், புலன்களால் உண்டாகும் ஆனந்தத்தில் அவர்கள் மனம் செல்லாமல் தடுத்து, கடவுளை நினைத்து, மேம்பாடடையும் படி செய்வதுதான்.

உண்மையான காதல்.

கடவுளைத்துதித்து உயர்நிலை அடைவதான ஒருமனைவி, கணவனை வழிப்பட்டுச் சேவை செய்து அடையலாம். கடவுளை வழிப்பட்டு சித்தியை அடையும் மனிதனுக்கு சத் என்று பெயர். கணவனை வழிப்பட்டு முக்தியடையும் மனைவிக்கு சதியென்று பெயர். சதியாக ஆன மனைவி கடவுளுடன் கலக்கிறாள். உண்மையான காதல் என்பது ஒருவரிட மட்டுமே கொள்ளக்கூடியதாக இருக்கும். காதலால் காதல் நிலை மாறுவதில்லை, சுயநலத்தால் மாறுகிறது. ஹிந்து கலியாணத்தின் நோக்கம் சுய நலத்தை விருத்தி செய்வதல்ல, காதலை வளர்ப்பது. உண்மையான காதலைவளர்ப்பதும் கடவுளை அடைவதும் ஹிந்து தர்மத்தின் எண்ணமில்லையானால், மற்ற தேசங்களைப்போல ஹிந்துமதத்திலும் ஒருஸ்திரீ ஒவ்வொருவராக எவ்வளவு பேரை வேண்டுமானாலும் கலியாணம் செய்துக் கொள்ளலாம் என்று ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் கொடுத்திருப்பார்கள்.

புனித லட்சியம்

ஒழுக்கக் கட்டுப்பாடுதான் ஹிந்து கல்யாணத்தின் அடிப்படையான கருத்து. ஒரு ஸ்திரீயை ஒரு ஆடவன் மேல்பார்வையிலேயே ஆயுள் முழுதும் விட்டு வைப்பதன் தாத்பரியம் அவளை பலரது பார்வையிருந்து காக்கவும் அவள் வேண்டத்தகாத சம்பந்தங்கள் வைத்துக்கொள்வதை தடுக்கவும் மனதைக் கட்டுப்படுத்தவும்தான். இதர்க்கு நம் தர்ம சாஸ்திரங்களில் பரிஸங்க்யா விதி என்று பெயர். கணவன் இறந்த பின்னும் ஹிந்துஸ்திரீயின் உள்ளத்தில் வேறு ஆடவன் நினைவு வராமல் இருப்பது இதனால்தான்.

பரிதாபம்

ஹிந்து மதத்தின் உயரிய பழைமையான நியதி விட்டு மேல்நாட்டு நாகரீகத்தைப்பின்பற்ற இப்பொழுது ஹிந்து சமூகம் ஆசைபடுவது பரிதாபமாக கவனிக்க வேண்டிய விஷயம் பிரம்மசரிய லக்ஷணத்தைப்பலபடுத்தாமலும் சதிமனப்பான்மையை காப்பாற்றாமலும் புலன் ஆனந்தத்தை வளர்க்க சக்தியை தவறான வழியில் செலுத்தத் தொடங்கியிருக்கிறது. கல்லியாணமோ, ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள சம்பந்தமோ ஆனந்தம் அடைவதற்காக ஏற்பட்டதல்ல, ஒழுக்ககட்டுப்பாடு அடைவதற்காகதான் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். கல்லியாணத்தின் புனிதமான லக்ஷயமும் ஒரு ஸ்திரீயின் கற்பும் ஹிந்து மதம் உலகத்திற்கு அளித்த பெரும் புதையல்கள். இந்த லக்ஷியத்தைக் கைக்கொள்ளாமல் எந்த தேசமும் எந்த ஜாதியும் எந்த மங்கையரும் இவ்வுலகிலோ அமைதியை அடைய முடியாது. ஆத்ம அமைதியை அடைய முடியவே முடியாது.

ஹனுமான்

ஏகாதசி உபன்யாஸம்
கும்பகோணம்

கீழ டபீர்தெரு படித்துறையில் 10-12-40 ஏகாதசி தினம் முத்ராதிகாரி பிரும்மஸ்ரீ வாஸுதேவ சாஸ்திரிகளால், "ஸ்ரீ சங்கர விஜயம்" உபந்யாஸம் செய்யப்பட்டது. ஏற்கனவே, ஸ்ரீ ஆதிபகவத் பாதாள் திக் விஜயயாத்திரையாககிளம்பின பரியந்தம் சொல்லப்பட்டிருந்தது. அதற்கு மேல், குமாரில பட்டாச்சாரியார் என்பவரைப் பற்றித் தெரிந்து கொண்டு அவரைப் பார்த்து வாதஞ்செய்ய கிளம்பிவர, அந்த சமயம் குமாரில பட்டர், உமியினால் எரிக்கப்படும் அக்னியில் சரீரத்தைக்காட்டிக் கொண்டு பிராணத்தியாகம் செய்து வரும் நிலைமையாயிருந்தது. அப்போது, காரணம் கேட்க, பட்டாசாரியார், தான் பூர்வத்தில் பௌத்தகுருவிடம் பாடம் படித்து அவர்கள் மதத்தையறிந்து கொண்டு, பிறகு அதைக்கண்டிக்க அதனால் குருவினால் உல்லங்கனம் செய்யப்பட, குமாரிலபட்டரும் கோபித்துக் கொண்டு அத்வைதத்தைக் காட்டிலும், கர்மாதான் மனுஷ்யனுடைய சுகதுக்கத்துக்கு காரணம் என்றும் கர்மாவையே எல்லோரும் செய்யவேண்டுமென்றும் பிரசாரம் பண்ணி, பௌத்தர்களை ராஜாவைக் கொண்டு சிரச்சேதம் பண்ணி, கர்மாவே உத்கிருஷ்டம் என ஸ்தாபித்து அநேக சிஷ்யர்களுடன் சஞ்சாரம் செய்து வந்ததாயும்தான் குருவுக்குச் செய்த அபசாரத்துக்கு பிராயச்சித்தமாக அக்னியில் பிரவேசிப்பதாயும் கடைசிகாலத்தில் யார்எதை நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அதையே போயடைகிறார்களென்று கீதையில் சொல்லியபடி, தனக்கு ஸ்ரீ பகவத்பாதாள் தர்சனம் கிடைத்து ஜன்மாசாபல்யமடைவதாயும் விக்ஞாபித்து இனி தனக்கு வாதஞ்செய்து கடைசியில் அத்வைதத்தை ஸ்தாபிக்க சரீரம் இடங்கொடுக்காததால் தன் சிஷ்யரான மண்டனமிச்ரர் சாக்ஷாத் கலைவாணியை பார்யையாகவுடையவராய் காஷ்மீரத்தில் வஸிப்பதாயும் அவர் மஹாவித்வானாதலால் அவரை வாதம் பண்ணி ஜயித்து, அத்வைதத்தை ஸ்தாபிக்க கேட்டுக்கொண்டும் குமாரிலபட்டாசாரியார் ஸ்ரீ பகவத்பாதாளை தியானித்துக் கொண்டு சரீரத்தை விட்டார். பிறகு ஸ்ரீ பகவத்பாதாள் மண்டன மிச்ரரை பார்க்க புறப்பட்டார் என்ற கட்டம் மிக உருக்கமாக உபந்யாஸம் செய்யப்பட்டது. கடைசியில் துளஸிமாலை பிரஸாதம் வழங்கப்பட்டது.

ஏ-கி

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும். அசதி களைப்புச்சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினாப்பள்ளி

ஸ்தாபகர்:-
V. E. நடராஜசாஸ்திரி,
ஆயுர்வேதாசார்ய (Regd)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

கதம்பம் அல்லது
பார்வதி=கல்யாணம்

(எஸ். கே. விச்வேச்வர சாஸ்திரிகள். மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர்.)

சுந்தரம், சங்கரன் இருவரும் தகப்பன் இழந்தவர்கள்: ஒரேவகுப்புப்பிராமணர்கள்: கொஞ்சம் சொத்து உண்டு: உயர்ந்த மூளையும் நல்ல குணமும் பொருந்தியவர்கள். அவரவர் தாயின் உதவியால், இருவரும் ஆரம்பத்தில் சேர்ந்து படித்தார்கள். சிறு வயது முதல் இவர்களுக்கு ஏற்பட்ட ஸ்நேகம், நாளுக்கு நாள் விருத்தியாயிற்று. ஆரம்பத்தமிழ் படிப்பு முடியும் சமயம். இந்நாளைப்போல் வயது கடந்து உபநயனம் நடக்கும் வழக்கம், அக்காலத்தில் இல்லை. ஆதலால் அவர்கள் இருவருக்கும், எட்டு வயதில் சற்று முன்னும் பின்னுமாக பூணூல் கல்யாணம் நடந்தது. சுந்தரம் இம்முதல் ஆச்ரமத்தை சற்றுத் தழுவி, முடிந்த வரையில் நடந்து வந்தான். இங்கிலீஷ் படிப்பு ஓங்காத, அந்த நாளில் ஆசைப்பட்டு ஆங்கிலம் பயின்றான். சங்கரன் தனக்கு உபநயனம் ஆனவுடன், இப்பிரம்மசாரி ஆச்ரமத்தில் அப்போதுள்ளவர்களுக்குதான் வழிகாட்டியாய் இருக்கவேண்டும் என்ற எண்ணங் கொண்டான்.

இவ்வாச்ரமம் பிரம்மத்தினிடத்தில் சாத்தப்பட்ட ஏணியின் அடிப்படியாகும். மற்ற (இல்லற, வானப்ரஸ்த, துறவறம் என்ற) மூன்று ஆச்ரமங்களும்' அந்த ஏணிக்குள்ள பாக்கி 3 படிகளாகும். காமக்குரோதங்கள் இல்லாமல் விதிப்படி இதை அநுஷ்டிப்பவன் பரலோகத்தில் பூஜிக்கப்படுகிறான்.

இவ்வாச்ரமத்தின் முதல் வகுப்பு, நைஷ்டிக பிரம்மசாரித்வம் என்பது. இதற்கு சாட்சி பூதராயுள்ளவர்கள், ஆஞ்சனேயர், பீஷ்மர் ஆகிய இருவருமே. இது அசாத்யம். இதற்கு அடுத்த கீழ்ப்படியாயுள்ளது, சாதாரணமாய் அனுஷ்டிக்கத்தக்கது. இதைத்தான் சங்கரன் அனுஷ்டித்து வந்தான் சற்றேறக்குறைய. இதை விரிவாய் எடுத்தெழுத இங்கே இடம் இல்லை. சுருங்கச் சொல்லில், அசூயை இல்லாதவனாகவும் தர்மார்த்தங்களில் ஸமர்த்தனாகவும், குருவினிடத்திலாவது, அவர் பிள்ளை, பேரனிடத்திலாவது பிரமசாரி கல்விக்காக இருக்கவேண்டும். சிஷ்யன் எந்தெந்த காரியங்கள் செய்யத்தக்கதோ, அவைகளை எல்லாம் செய்து விட்டு, செய்து விட்டேன் என்று சொல்லி அவர் வலப்பக்கம் நிற்கவேண்டும். முன்னுக்குவர விருப்பம் உள்ள, பிரம்மசாரியானவன் எல்லா வேலைகளையும் செய்தபின் குருவினிடம் அத்யயனம் செய்யவேண்டும். பிரம்மசாரிக்கு விரிவாய்ச் சொல்லப்பட்ட நியமங்களை எல்லாம் 1. ஸந்தியோபாஸனம், 2. (அக்னி உபாஸனம், 3. பிட்சாசரணம் செய்து குருவுக்குத் தெரிவித்துப் பிறகு அவர் அனுமதி பெற்று உண்ணல்) பிரதிதினமும் அநுஷ்டிக்கவேண்டும். ஜிதேந்திரியனாய் இருப்பதோடு, குருவுக்குப் பின் தூங்கி முன் எழவேண்டும். பிரம்மசாரி அனுபவியாத கந்தங்களையும், ரஸங்களையும் இவ்விரதத்தை முடித்து விட்டு அனுபவிக்கட்டும் என்பது தர்மங்களில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இப்படிச்செய்வதால் வித்தையும் சீக்கிரம் ஏறி, ஸபலமாகும் என்று கூறப்பட்டிருககிறது.

தர்மம் தலைகெட்டுக்கிடக்கும் இந்நாளில் உரிய காலத்தில் உபநயனம் செய்துகொண்டு கர்மானுஷ்டானங்களை (த்ரிகால ஸந்தியாவந்தனத்தையாவது) விடாமல் செய்வதோடு கொஞ்சமாவது அத்யயனம் செய்யவேண்டும். இவ்விஷயங்களில் மடாதிபதிகள் மிக ஊக்கத்தோடு செய்து வரும் பிரயத்னம், சிஷ்டாசாரங்கள்குறைந்துகொண்டுவரும் இக்காலத்திற்கு மிகப்பொருத்தமாயிருப்பதுடன், அம்மறைவைக்குறைத்து தர்மம் தழைத்தோங்க காரணமாகிறது. இதில் தலையிடுபவர்கள் வேறொருவரும் இல்லை என்றே சொல்லலாம். கடைசியாக குருவுக்கு தட்சணை கொடுத்து விதிப்படி இவ்விரதத்தை முடிக்கவேண்டும்.

சங்கரன் அந்த ஊர் சாஸ்திர பாடசாலையிலும் சேர்ந்து, வெகு ஊக்கத்தோடு படித்தான். "எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல், மம்மர் அறுக்கும் மருந்து" என்று நாலடியாரில் சொல்லியபடி எண்ணியே இருவரும்படித்து வந்தார்கள். சுந்தரம் ஒவ்வொரு பரீட்சையிலும் தவறாமல் தேறி, பி, ஏ, பாஸ்செய்து, அப்போது ஏற்பட்டிருந்த ஒரு போட்டிப் பரீட்சைக்குப் போய், அதில் முதலாய்த் தேறினான். இதற்குள் சங்கரனுக்கும் ஸம்ஸ்கிருத பாடசாலைப் படிப்பு முடிந்தது. அந்த ஊரிலே மிகவும் கெட்டிக்காரரான ஒரு பெரியவர் இடம் அதற்கு மேல் படித்து வந்தான். இச்சமயம் சங்கரன் தாயார் காலமானாள். காரியங்கள் எல்லாம் கிரமமாய் ஆயிற்று. பிறகு அவன் குரு வீட்டிலே இருந்து வந்தான் இவர்கள் இருவருக்கும் வித்யாஸமான படிப்பாய் இருந்தாலும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதெல்லாம் தங்கள் பாஷா விசேஷங்களைப் பற்றியும் வேறு வேடிக்கையாயும் பேசாமல் இருக்கமாட்டார்கள். "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை" என்றபடி நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது இவர்கள் சினேகம்.

சுந்தர அய்யருக்கு அந்த ஊரிலேயே ஆக்டிங் டிப்டி கலெக்டர் வேலைக்கு உத்தரவு வந்தது. 200 ரூபாய் மாதச் சம்பளம் அந்த ஊரில் இருந்த ஸப்கலெக்டரிடம், சிலமாதம் வேலை பழகும்படி உத்தரவு இட்டிருந்தது. அப்போதே ஸ்திரீதனம் உள்ள, பெற்றோரில்லாத ஒரே பெண் லட்சுமியை சங்கரருடன் கலந்து, சுந்தரர் கல்யாணம் செய்து கொண்டார். வேலை பழகியதும் அவர் வேறு ஊருக்கு மாற்றப்பட்டார்.

(தொடரும்)

குடந்தை நகரில்
ஓர் பெண் பாடசாலை பெற்றோர்
தினக்கொண்டாட்டம்.

ஸ்ரீ ஸரஸ்வதி ஹையர் எலிமெண்டரி பாடசாலை (Municipal School) இல் மார்கழி-2உ ஞாயிறு மாலை 4½ மணி முதல் (Mrs. E, B. Frederick.) தஞ்சை ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டெண்டின் மனைவி அக்ராசனத்தின் கீழ் இக்கொண்டாட்டம் நடைபெற்றது. அநேக சீமான்களும் சீமாட்டிகளும் விஜயம் செய்தார்கள்.

நிகழ்ச்சிக்குறிப்பின்படி, நந்தனார் டிராமா உள்பட, 12 விஷயங்களும் கரகோஷத்துடன் நடந்தன. இந்நாடகத்தில் நந்தன் வேஷம் பூண்ட பெண் ஜயத்தின் நடிப்பு வெகு உருக்கமாயும் நன்றாக இருந்தது; பறையர்கள் வேஷம் போட்டுக் கொண்ட பெண்களும் தங்கள் தங்கள் பாகங்களைச் செவ்வனே நடித்தார்கள்.

படிப்புச் சொல்லி வைப்பதுடன், இம்மாதிரி கொண்டாட்டங்களில் ஸ்கூல் மாணவிகளையே கலந்து கொள்ளச்செய்தல், ஸ்கூலைவிட்ட பிறகும், அவர்களுக்கு தங்கள் ஸ்கூலின் மேல் உள்ள அன்பு குறையாமல் ஓங்கிவளரவும், அவர்களின் வெகுகுஷியான மாணவி காலங்களை ஞாபகப்படுத்தவும் காரணமாகும்.

இந்த ஸ்கூல் ஹெட் மிஸ்டரஸ் (Mrs. R. Davis) அம்மாளும் மற்ற உபாத்யாயினிகளும் ஒத்துழைத்து வருகிறார்கள் என்பதை இச்சம்பவம் காண்பிக்கிறது.

முக்யஸ்தர்களுக்கு மாலையிட்டு மைத்ததலைவர்களுக்குப்புஷ்பம் கொடுத்து அக்ராஸனர் முடிவுரையோடு வந்தனோபசாரத்துடன் Tagore's National Anthem பாடி வெகுசிறப்பாய் வைபவம் நடந்தது. ஒ. தி

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopladesikachariar, and S, Kalyanasundaram.